ஸ்ரீ

பராதேவி துணை.

சாவித்திரி பாடம்.

இஃது

சென்னை

R. S. சுப்பலக்ஷுமி அம்மாளால்

பிரசுரிக்கப்பட்டது.

ஆறாம் பதிப்பு.

(Copyright Registered)

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

MADRAS:

THE COMMERCIAL PRESS

1923

Price Annas 2 [விலை அணா 2.

முகவுரை.

சாவித்திரிபாடம் என்பது கர்ணபரம்பரையாய் ஆதரிக்கப்பட்டு இன்னும் உயிரோடிருக்கும் பாட்டுகள் முக்கியமானவைகளில் ஒன்று. இதில் அச்வபதி என்னும் அரசனுக்குத் தவப்பெண்ணாய்ப் பிறந்த சாவித்திரி என்பவள் பிரமனெழுத்தின்படி பங்குனி மாதம் முதல்தேதி இறந்துபோன தன் கணவர் சத்தியவான் என்பவர் உயிரை தான் செய்த கௌரி பூஜையின் பலத்தினாலும் தன் சாமர்த்தியத்தினாலும் மீட்டுக்கொண்டதோடு முக்கியமான சில வரங்களையும் இயமதர்மராஜனிடத்திலேயே பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாவித்திரியம்மன் செய்த கௌரி நோன்பாகிய மாசியும் பங்குனியும் கூடும் வேளையிற் செய்யப்படும் இந்த மாசி பங்குனி நோன்பென்பது நம்முடைய தேசத்தில் எல்லாச் சுமங்கலிகளாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதற்கு நைவேத்தியம் காரரிசிமாவும் காராமணி அல்லது துவரையும் கலந்த அடை என்னும் பணியாரம். இதனால் **காரடையான் நோம்பு** என்று இதை விசேஷமாய்ச் சொல்வது வழக்கம். சாவித்திரியம்மன் காட்டில் வசித்துக்கொண்டிருந்ததனால் காரரிசியும் துவரையுந்தான் கிடைத்திருக்கலாம் போலும். நிவேதனஞ் செய்யும் பொழுது "**உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்தேன், ஒருக்காலும் என் கணவன் பிரியாதிருக்கவேணும்**" என்ற மந்திரத்தைச் சொல்லுவார்கள்.

மற்றைய நோன்புகளுக்குக் கையில் சரடு கட்டிக்கொள்வது வழக்கமாயிருக்க இதற்குமாத்திரம் சரட்டில் மஞ்சள் கோர்த்துக் கழுத்தில் கட்டிக்கொள்ளுவார்கள். இந்தநோன்பின் முக்கிய பலன் தீர்க்க சுமங்கலியம்.

இந்தச் சாவித்திரி பாடத்தை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை தவறாமல் சொல்லுகிற அல்லது சொல்லக்கேட்கிற சுமங்கலிகளுக்கு அவ்வப்பொழுது விரற்கடை மங்கலியம் வளருமாம். இத்துணை மகத்துவம் வாய்ந்த இதைப் பாராயணஞ் செய்து மகாதேவியின் கிருபையை யாவரும் அடைவார்களாக.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

சகலவித்யா சொரூபியான

ஸ்ரீ சாரதா தேவிக்கு

இந்த மகாபக்திகரமான சாவித்திரி மகாத்மி
யத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

R. S. S.

உ

சாவித்திரிபாடம்

அதாவது

மாசி பங்குனி நோன்பு.

கடவுள் வணக்கம்.

1 அந்தமாம் பாரதத்தில் ஆரண்ய பர்வத்தில்
சுந்தரமாம் பாண்டவர்க்கு தீயமுனிவர் உரைத்தார்
2 சத்தியவான் தேவி சாவித்திரி நற்கதையை
பக்தியுடன் நான் பாட பார்வதியே முன்னடவும்
3 தொப்பைக் கணபதியே தும்பிக்கையுள்ளவரே
விக்கினங்கள் வாராதே விநாயகரே முன்னடவும்
4 பச்சரிசிவெல்லம் தேங்காய் பழத்துடனே
அப்பமுடன் எள்ளுருண்டை அதிரஸம் மோதகமும்
5 பக்தியுடன் நான் படைப்பேன் பாலகணேசருக்கு
அற்புதமாக அருள் செய்ய வேணுமய்யா.

கதை வரலாறு.

6 வனத்திலந்தப் பாண்டவர்கள் வேட்டைக்குப் போயிருந்தாள்
பர்ணசாலை தனிலே பாஞ்சாலி தானிருந்தாள்
7 சைத்திரதன் அங்குவந்து திரௌபதையை தேரில்வைத்து
கொண்டு சென்றுபோம்போது கூடிவந்து பாண்டவர்கள்
8 பஞ்சவர்கள் கோபமதாய் படைபண்ணித் தான் ஜெயித்து
ஐங்குடுமிவைத்து அவனைத்துறத்திவிட்டாள்
9 சைத்திரதன் போனபின்பு சலித்துமந்தப் பாண்டவர்கள்
மிகவும் மனதுநொந்து வீராங்கு வீற்றிருந்தாள்
10 தருமபுத்திரராஜா சலித்தே மனந்தளர்ந்து
தலைகுனிந்து சோகித்து தருமராங்கு வீற்றிருந்தார்,

பாண்டவர்களிடம் மார்க்கண்டேயர் எழுந்தருளுதல்.

11 வந்தங்கு தோன்றிநின்றார் மார்க்கண்ட மாமுனியும்
எழுந்து நின்றுபாண்டவர்கள் எதிர்கொண்டடி பணிந்து
12 ஆஸனத்தில் வைத்து அருகிருந்து தருமர்சொல்வர்
கேளுமையா மார்க்கண்டரே எங்களுட கிலேசத்தை
13 எங்களைப்போல் கிலேசித்தோர் உண்டோ உலகதனில்
என் தம்பியர்போல் சோகித்தோர் உண்டோ தரணிதனில்
14 எந்தனுடசோகம் இருக்கட்டு மென்றாலும்
என் தம்பிமார்சோகம் சகித்திருந்தோ மானாலும்
15 எங்களுட திரௌபதையாள் ஏந்திழையாள் பட்டதுக்கம்
என் ஹிருதயம்பிளந்து எரிகிறது கண்டீரா
16 (நாங்கள்) தாஸாளாய்ப்போனவுடன் தன்மானங்காத்து நின்றாள்
எங்களையும் மீட்டுவிட்டாள் ஏந்திழையாள் திரௌபதையும்
17 இவளைப்போல் பதிவிரதை இவ்வுலகிற் கண்டதுண்டோ
என்று இஷ்டர் உரைக்கலுமே ஏதுரைப்பார் மார்க்கண்டர்
18 பதிவிரதை யானவர்கள் பிரபஞ்சத்தில ரொம்பஉண்டு
உம்முடைய பத்தினியாள் உத்தமிதான் ஆனாலும்
19 இன்னம் பதிவிரதைகள் ஏற்றமுள்ளார் சற்கதையை [டர்.
இன்பமுடன் கேளுமென்று எடுத்துரைத்தார் மார்க்கண்

மார்க்கண்டேயர் நளராஜன் சரித்முரைத்தல்.

20 வீரசேனன் குமாரன் வீரியவான் நளனொருக்கால்
சூதுகளாடி ராஜ்யம் தோற்று மனந்தளர்ந்து
21 சொக்கட்டான் ஆட்டத்தால் தோற்றுத் தரணிவிட்டு
தமயந்தி தன்னுடனே தயங்க வனத்தில் வந்து
22 ஏகவஸ்திரந்தரித்து இரண்டாகவே கிழித்து
நடுக்காட்டில் தன்னுடைய நாயகியைத் தான்பிரிந்து
23 கார்க்கோடகன் கடித்து கருகியவர் மேனியெல்லாம்
(அவர்) தேகம் தெரியாதே தேசாந்தரம் வசித்தார்

24 தமயந்தி நாயகரைத்தேடி வனந்திரிந்து
பதிவிரதை அக்கினியாய் வேடனை நீருக்கி
25 நாயகரைக் காணுதே ராஜ்ஜியத்தில் வந்திருந்து
தன்பதிவிரதா தர்மத்தால் பர்த்தாவைத் தானடைந்தாள்
26 இன்னம் புதுமையுண்டு ஏற்றகுலப் பாண்டவர்காள்
இன்னேரிதிகாஸம் எடுத்துரைப்பேன் பஞ்சவர்காள்.

மார்க்கண்டேயர் ஸ்ரீராமமூர்த்தி சரிதமுரைத்தல.

27 தசரதபுத்திரனார் ஸ்ரீராமசந்திரனார்
கைகேயி வாக்கியத்தால் கானகத்தில் அலைந்து
28 வைதேகியைப் பிரிந்து மானையவர் பின்தொடர்ந்தார்
வாளரக்கன் வந்து மைதிலியைக் கொண்டுசெல்ல
29 திரும்பிவந்தராகவரும் சீதையைக் காணுதே
சுக்ரீவன் என்னுமந்த தோழனுடன் கூடிவந்து
30 அலைகடல் தன்னில் அணைபோட்டு லங்கைவந்து
தசமுகனைச் சம்ஹாரித்து சீதை சிறை மீட்க
31 (அவள்) பதிவிரதா தருமத்தால் அக்கினிப் பிரவேசம் பண்ண
அதிக சுகிர்தத்துடனே அயோத்திதனையாண்டிருந்தார்
32 இன்னம் புதுமையுண்டு ஏற்றகுலப் பாண்டவர்காள்
இன்னமொரு பதிவிரதை இதிகாசம் நானுரைப்பேன்.

மார்க்கண்டேயர் சாவித்திரி சரிதமுரைத்தல்.

33 மத்திரதேசம் மகிமை யுள்ள ராஜ்ஜியத்தில்
அசுவபதியென்னும் அவருமொரு ராஜாவாம்
34 தருமம்தவருதே தரணி தன்னை ஆண்டிருந்தார்
புண்ணியங்கள் செய்து புவனங்கள் ஆண்டிருந்தார்
35 புத்திரனில்லை என்று புகழுடைய ராஜரப்போ
சந்தானமில்லை யென்று தாபம் மிகவடைந்தார்
36 நாரதரங்கு மப்போ நலமாய் எழுந்தருள
கண்டுமந்த ராஜா கைகூப்பியே பணிந்து

37 மைந்தரில்லாக் குறையைச் சொல்லி மனந்தளர்ந்தார்
கேட்டுமந்த நாரதரும் கிருபையுடனே ஏதுசொல்வார்
38 சாவித்திரி தேவியை நீர் சிந்தை தன்னில் நினைந்து
ஓமங்கள்செய்து நேமத்துடனிருந்தால்
39 (அந்த) தேவி கிருபையால் ஜெயமுண்டு என்று சொல்லி
அக்கினியில் ஓமங்கள் பண்ணிவைத்தார் நாரதரும்
40 அந்தணர்க்கும் தேவர்கட்கும் அவிர்ப்பாகமுங்கொடுத்து
வந்தனங்கள் பண்ணி மகாராஜர் வீற்றிருந்தார்
41 அக்கினி குண்டத்தின் நடுவிலொரு தேவிவந்தாள்
அறிவீரோ பாண்டவர்காள் அவளுடைய ரூபத்தை
42 அதிகாலை தன்னில் பிரம்மமாய்த் தானிருப்பாள்
மத்தியான்ன காலம் ஜெகத் ஜோதியாயிருப்பாள்
43 சந்தியா காலத்தில் சந்திரகாந்தப் பட்டுடுத்தி
அனுஷ்டானஞ் செய்திருக்கும் அன்புடையபக்தர்களின்
44 மகத்துக்கள் தங்களுட மனதில் விளங்கிடுவாள்
இப்படிப்பட்ட ஏற்றமுள்ள தேவியப்போ
45 மூர்த்திகரித்து அரசன் முன்னே விளங்கினின்றாள்.
கண்டு மந்தராஜன் கையை உயரவெடுத்து
46 பக்தியுடன் துதித்து பாதங்களில் வணங்கி
(அம்மா) நீர் ஆத்மஸ்வரூபமோ அற்புத விக்ரஹமோ
47 பிரம்மஸ்வரூபமோ பேதமற்ற வஸ்துவோ
திக்குப்பாலரோ திருமூர்த்தி நீர் தாமோ
48 நீர்யாரோ எனக்கு அறிய உரையுமென்றார்
கேட்டுமந்த சாவித்திரி கிருபையுடன் ஏதுரைப்பள்
49 நான்முகனார் அனுப்ப நானும் வந்தேன் ராஜாவே
நான்முகர் சொன்னபடி நானுமிப்போ சொல்வேன்
50 புத்திரரும் இப்போவில்லை புகழுடைய ராஜாவே
இனிமேல் உண்டாகுமைய்யா இப்பொழுது தானுமில்லை
51 இந்தத் தபஸுக்கு ஏற்ற பலனாக இப்போ [ன்
(உம்ம) கடுந்தபஸுக்கேற்ற கன்னிகையாய் நான் வருவே
52 கன்னிகையாய் வந்து அவதரிப்போம் இப்பொழுதே
என்று சொல்லி சாவித்திரி அந்தர்த்தானமடைந்தாள்

சாவித்திரியம்மன் அவதாரம்.

53 அந்தர்த்தான மாய் அவள் மறைந்த பிற்பாடு
பட்டமகிஷி யராம் பாராளும் தேவியிடம்

54 மாளவி என்னும் மஹாராஜன் தேவியரின்
திருவயிற்றில் வந்து பிறந்தாளே தேவியரும்

55 வந்து பிறந்த அம்மன் வடிவழகை நீர்கேளும்
சந்திரன்போல் முகமும் தாமரைப்பூப்போல் நிறமும்

56 சிவந்த அதரமும் செம்பவழ வாயழகும்
வெள்ளை நிறமும் மேனியுட கட்டழகும்

57 கறுத்தகுழல் சுருளும் கண்மலரும் காதழகும்
பாதவடிவழகும் பாங்குடைய கைத்தலமும்

58 கோடிசூரியர் வந்து கூடியுதித்தாப்போல்
சித்திரித்த பொம்மைபோல் தேவி பிறந்தாளே

59 அச்வபதி கேட்டு அதிகசந்தோஷமுடன்
சித்திரமாம் பொய்கைதனில் சடுதியாய் வந்திறங்கி

60 தீர்த்தங்களாடி செந்நெற்கள் கொண்டுவந்து
விரைதானஞ் செய்து வேதியர்கள் எல்லார்க்கும்

61 ஆயிரம் பால்பசுக்கள் அந்தணர்க்குத் தான் கொடுத்து
பூதானஞ் செய்தார் பூசுராளெல்லவர்க்கும்

62 அரண்மனைகள் வீதிகளும் அலங்காரம் செய்துவைத்து
ஆஸனத்தில் வீற்றிருந்தார் அசுவபதி ராஜாவும்

63 முத்திழைத்த கோவிலுக்கு மூப்பி என்னும் தாஸியவள்
படு மடிப்பின்மேல் பாலகியைக் கொண்டுவந்து

64 அச்வபதிராஜா அடிமடியில் வைத்திடவே
ராஜா உச்சிமுகந்து உள்ளங்கால் கண்ணிலொற்றி

65 பொன்னுரைத்து நாவிலிட்டார் புத்திரிக்கு அப்பொழுது
ஜாதகர்மம் நாமகர்மம் செய்து மந்தராஜாவும்

66 கடுந்தவஸால் வந்திட்ட கட்டழகி தேவியரை
சாவித்திரி யம்மனென்று சந்தோஷமாயழைத்தார்

67 மாதாமனமகிழ வளர்ந்தாளே மங்கைநல்லாள்
தாயார் மகிழ தவிழ்ந்து விளையாடினாள்

68 தத்தடியிட்டு நடந்தாளே தையலரும்
சித்தாடைகட்டி தெருவில் விளையாடி வந்தாள்

69 சுக்கிலபக்ஷச் சந்திரன் போல் சுந்தரியும் தான் வளர்ந்தாள்
மகாலக்ஷ்மியைப்போல வடிவழகாய் இருந்தாள்

70 இவளுடையரூபத்தைக் கண்டனந்தம் ராஜாக்கள்
(நமக்குக் கிட்டாது என்றெண்ணிக் கேட்காதிருந்தார்கள்

71 மாதாபிதாவும் அம்மன்வடிவழகைக் கண்டுகந்து
இவள் அழகுக்கிசைந்த பர்த்தா யாரை வரித்திடுவோம்

72 என்று எண்ணி ராஜாவும் ஏக்கம் பெரிதாக
சாவித்திரியம்மனுடன் தானெடுத்துரைப்பர்

73 (இந்த) உலகமெல்லாந்திரிந்தேன் உன்னழகிற்கேற்றபர்த்தா
காணேமே எங்கும் என் கன்னிகையே நீயுமிப்போ

74 சதுரங்கசேனையுடன் தோழிமாரோடுசென்று
(நீ) தானே வரித்துவா தார்குழலே என்று சொன்னார்

75 ஏதுபிதவே இப்படியும் சோல்வீரோ
ஏற்குமோ தர்மமிது எங்கேயானாலு முண்டோ

76 தந்தையன்றோ கன்னிகையைத் தானம்கொடுத்திடுவர்
தந்தையரும் இல்லாட்டால் சகோதரரும் செய்திடுவாள்

77 சகோதரரும் இல்லாட்டால் தாயார் நடத்திவைப்பள்
தாயாருமில்லாட்டால் தானே வரித்திடுவள்

78 என்றுசொல்ல சாவித்திரி ஏதுசொல்வர் ராஜாவும்
உலகமெல்லாந் திரிந்தேன் உன்னழகுக் கேற்ற பர்த்தா

79 வையகமெல்லாந் திரிந்தேன் வடிவுக்கிசைந்த பர்த்தா
(உன்) அழகுக்கிசைந்தபர்த்தா காணேனே ஆரணங்கே

80 நீதானே வரித்துவா தார்குழலே குற்றமில்லை
(என்று) அச்வபதி ராஜா அவரும் விடையளிக்க.

———

சாவித்திரியம்மன் கணவரை வரித்தல்.

81 அப்பொழுது சாவித்திரி அதிகலஜ்ஜை தன்னுடனே
மாதாவிடையளிக்க மனதொத்த தோழியுடன்

82 அநேகஞ் சேனையுடன் அந்தப்புரங் கடந்து
தேரின் மேல் ஏறி தேசமெல்லாம் ஆராய்ந்து

83 தேசமெல்லாங் காணுமல் திகைத்து வனத்தில் வந்தாள்
(ஒரு) நந்த வனந்தனிலே ஞாயி ருதித்தாப்போல்

84 நல்லமலரெடுக்கும் நாயகரைக் கண்டவுடன்
புஷ்பம் பறிக்கும் புண்ணியரைக் கண்டவுடன்

85 இவர்தாம் நமக்கேற்ற இஷ்டபர்த்தா என்றறிந்து
மனதுக்கிசைந்த பர்த்தா வரித்தே திரும்பி வந்தாள்

86 அப்பொழுது நாரதரும் அங்கே எழுந்தருளி
அசுவபதி கொலுவில் அவருமங்கு வீற்றிருந்தார்

87 நாரதரையும் பிதாவையும் நன்ருய் நமஸ் கரித்தாள்
நாரதர் பார்த்து ராஜனுடன் ஏதுரைப்பர்

88 கன்னிகைக்குத் தக்க கணவரை நீர் தேடாமல்
(நீர்) தாமிருக்க ராஜாவே அவள் தானே வரித்து வந்தாள்

89 (என்று) மங்கையந்த சாவித்திரிமதிமுகத்தைத் தான்பார்த்து
(அம்மாநீ) யாரைவரித்துவந்தாய் அன்னமே சொல்லு

90 சாலுவதேசாதிபதி தன்பதியைத் தானிழந்து [மென்ருர்
காட்டினில் வந்து கடுந்தபசு செய்திருக்கும்

91 யவசேன ராஜருட ஏற்ற முள்ள புத்திரனுர்
அவரை வரித்து வந்தேன் என்ருளே ஆரணங்கு

92 அப்பொழுது நாரதரும் அதிக கிலேசமுடன்
இவள் மனதைத் தானறிய எண்ணியே நாரதரும்

93 கையைப் பிசைந்து கலங்கி யவர் சொல்லலுற்ருர்
நீஅறியாயோ பெண்ணே அவருடைய காரியத்தை

94 அதிககுண முள்ளவர்தான் அந்தக்கரணசுத்தியுண்டு
சகலகுண சம்பன்னர் தருமிஷ்டர் தானுமவர்

95 ஆனுலொரு தோஷம் இருக்கிறதுகாணய் நீ
அந்தவொரு தோஷத்தை இப்பொழுதே சொல்லுகிறேன்

96 இனறுமுதல் ஒருவருஷம் முன்னூற்றறுபதாநாள்
மத்தியான காலம் மரணம் வருமென்று சொன்னர்

97 மரணமவர்க் கென்று மகாத்மாவுஞ் சொன்னவுடன்
அசுவபதி கேட்டு மிகவும் மனங்கலங்கி

98 இதென்ன விசாரமென்று ஏக்கம் பிடித்தவரும்
சாவித்திரி யம்மா நீசந்தோஷ பர்த்தாவை

99 வேறே வரித்திடுவாய் மெல்லியரே என்றுரைக்க
வேறே வரியுமென்க விவேகமுள்ள கன்னிகையும்

100 பதிவிரதை யாவார்கள் பர்த்தா வரித்தபின்பு
பலபுருஷர் தேடுவரோ பதிவிரதா பங்கமன்றோ

101 அழகற்றுனுலும் அதிமூடனுனுலும்
குணமற்றுனுலும் குரூபியேயானுலும்

102 அந்தமில்லானுனுலும் ஆயுஸில்லானுனுலும்
அவரே எனக்கிசைந்த இஷ்டபர்த்தா என்றுரைத்தாள்

103 மனதுக்கிசைந்த பர்த்தா வரித்துவந்தேன் எந்தனையும்
கன்னிகாதானம் கொடுங்களென்ருள் கன்னிகையும்

104 நாரதரப்போ நன்மையுடன் ஏது சொல்வர்
(அவள்) தாலி பலத்தால் தருமராஜரையுந் தான்ஜெயிப்பள்

105 அவள் மனதுதிடத்தாலே மிருத்யுவையும் ஜெயிப்பள்
அசுவபதி ராஜாவே உம்ம அலங்காரக் கன்னிகையை

106 சத்தியவானுக்குத் தானங் கொடுங்களென்ருர்
என்றுசொல்லி நாரதரும் யதாஸ்தானம்போயடைந்தார்.

சாவித்திரியம்மன் திருக்கல்யாணம்.

107 சாவித்திரியம்மனுடன் தாயாருந் தோழிகளும்
பட்ட மகிஷியரும் பல்லக்கில் ஏறிவந்தாள்

108 சதுரங்க சேனையுடன் தானுமந்த ராஜாவும்
தேரின் மேலேறிவந்தார் தீரமுள்ள அச்வபதி

109 பொன்னுடனே பூஷணமும் பெட்டகத்திற் றனெடுத்து
பலவிதமாம் பண்டங்கள் கொண்டுவந்தார் வண்டிகளில்

110 யானை குதிரைகள்மேற் கொண்டுவந்தாரங்கமணி
தானை வெள்ளஞ் சேனையுடன் தானும் வந்தார் அச்வபதி

111 நாகஸ்வரமுழங்க நான்கு வகைசேனையுடன்
வந்தாரே அச்வபதி வளமான காடுதன்னில்

112 இரண்டு கண்ணுமில்லாத யவசேன ராஜாங்கே
காட்டிலிருந்து கடுந்தபஸ் பண்ணுகிறார்

113 அச்வபதி ராஜா அவருடைய கிட்டவந்து
ஆலிங்கனமும் பண்ணி அதிக சந்தோஷமுடன்

114 யவசேன ராஜருடன் ஏகாசனத்திருந்தார்
இஷ்டரைக்கண்டு யவசேனர் தான் மகிழ்ந்து

115 வந்தீரோ அச்வபதி வளமான காடுதன்னில்
காரணங்களுண்டோ உரையீர் கடுகவென்றார்

116 காரணங்கள் சொல்லுகிறேன் கற்பகமே நீர்கேளும் [கையை
(உம்மிட) அமிர்த.குமாரனுக்கு (என்) அழகுடையகன்னி

117 கன்னிகாதானம் தருவேன் நான் என்றுரைத்தார்
அப்போயவசேனர் அதிக சந்தோஷமுடன்

118 உமக்கும் நமக்கு மிது உத்தம சம்பந்தம்
எப்போது கூடுமென்று இருந்தேனே ராஜாவே

119 நான் ராஜ்ஜியப் பிரஷ்டனாய் நாடு விட்டுக்காட்டில்வந்து
காட்டினில் வந்தோம் கண்கள் தெரியவில்லை

120 காய் கிழங்குதான் புஜித்து கடுந்தபஸ் பண்ணுகிறோம்
இந்த அருந்தபஸ் பண்ண அறிவாளோ ஆரணங்கு

121 யவசேனர் தானுரைக்க ஏற்றமுள்ள அச்வபதி
அருந்தபஸ் செய்யுமுங்கட் காதரவாய்த் தானிருப்பள்

122 கலங்காதிருமென்று கலியாணம் நிச்சயித்து
காடு திருத்திப பவழக்கால் தான் நிறுத்தி

123 ஆகாசவெளிக்கு மேற்கட்டுக் கட்டியுவாள்
மேல்கட்டுக் கட்டி விடுதிப் பூக்கள் தொடுத்து

124 தோரணங்கள் கட்டி சுந்தரமாம் பந்தலிலே
தூணுக்கிடையில் தூண்டா விளக்கேத்தி

125 அச்வபதிராஜா ஆக்கினையுந் தப்பாதே
கலியாணமண்டபமும் காக்ஷியுடனே அமைத்தாள்

126 அச்வபதிராஜாவின் அலங்காரக் கன்னிகையை
சந்தனுதித் தைலமிட்டு தாதியர் நீராட்டி வைத்தார்

127 பச்சை மஞ்சட் பூசி பைங்கிளிக்கு நீராட்டி
அற்புதமாம் சுந்தரிக்கு அலங்காரஞ் செய்தார்கள்

128 பரந்தொரு நெற்றியிலே பொட்டு மிட்டாள் மையுமிட்டாள்
கொத்ஸைவைத்துப் பின்னி குழல் வாரிப் பூமுடித்து

129 குப்பியிற் பன்னீரும் குளிர்ந்திருக்கும் சந்தனமும்
சிற்றிடையாள் சாவித்திரி தேகத்திற் பூசிவிட்டாள்

130 வசிஷ்ட ரிஷியுடனே வாமதேவர் காசிபரும்
வனத்திலேயுள்ள மற்றும் ரிஷிகளுடன்

131 முற்றின தேங்காய் முன்னூறு கொண்டுவந்து
விக்கின விநாயகர்க்கு வேண்டித் தேங்காயுடைத்து

132 மைகுழலாள் சாவித்திரி மாதாபிதாவுடனே
வீற்றிருந்தாள் மணையில் விருதங்கள் செயயவென்றே

133 வசிஷ்ட மஹாரிஷியும் மந்திரங்கள் உச்சரிக்க
பாலிகையுந்தான் தெளித்து பாலமிர்தந் தான் சொரிந்தாள்

134 அந்தரங்கத் தோழியர்கள் அம்மணைன்டையினிற் சூழ்ந்து
மங்களங்கள்பாடி மான்கவரி வீசினர்.

135 பொற்றாமரை நிறத்தாள் பூர்ணசந்திரனைப் போல் முகத்தாள்
கட்டழகி சாவித்திரி கைதனிலே காப்பிசைத்தார்

136 தம்மாணி மார்பன் சத்தியவான் அப்பொழுது
விக்கினங்களில்லாதே விருதங்கள் பண்ணியவன்

137 சாந்தியுடன் ஓமம் சத்தியவான் செய்துமப்போ
பரதேசிக் கோலம் புறப்பட்டார் பாவனையாய்

138 அச்வபதிராஜா அருகினிலே கிட்டவந்து
மஞ்ச ம்ணிததேங்காய் வாழ்த்தியவர் கைக்கொடுத்து

139 கன்னிகையை நான் தருவேன் என்றேஅழைத்து வந்தார்
ஆனை மேலேறி அலங்காரக் காக்ஷியுடன்

140 மாலையிட்டு சாவித்திரி மணவாளர் தன்னுடனே
பூவால் அலங்கரித்த பொன்னூஞ்சல் ஆடிநின்றாள்

141 பொன்னூஞ்சல் தானாடப் பெண்கொடிமார் தான்பாட
வாத்தியங்கள் தான்முழங்க மங்கையர்கள் தான்பாட

142 நிறைநாழி முத்தெடுத்து நெய்விளக்குத் தானெடுத்து
மங்களாஹாரத்தி எடுத்தார்கள் மங்கையர்கள்

143 வேதகோஷங்களுடன் விருதும் பலமுழங்க
விரைக்கோட்டைமேலே விற்றிருந்தார் சத்தியவான்

144 அச்வபதி ராஜாவும் அவருடைய தேவியுமாய்
சத்தியவான் காலைப் பொற்தட்டின் மீது வைத்து

145 பாலினாற் காலலம்பி பட்டாலே தான் துடைத்து [தார்
கன்னிகையைக் கைப்பிடித்து சத்தியவான் கைக்கொடுத்

146 கன்னிகாதானம் காக்ஷியுடன் செய்தபின்பு [றார்
மறையோர்கள் கைக்கொடுத்து மங்கிலியம் வாழ்த்துமென்

147 மங்கிலியம் தொட்டு மறையோர்கள் எல்லவரும்
வாழ்வீர் வளமையுடன் மைந்தர்களைப் பெற்றிடுவீர்

148 (அம்மா) உன்ஐயரைப் போல அவனிமுழுதாள்வீர் [யிருப்பீர்
உன் தாயைப்போல் மாமியைப்போல் (சௌ) பாக்யவதியா

149 நிற்பீர் நிலைத்திடுவீர் நீடூழிவாழ்ந்திடுவீர்
தாலி முடிக்கினால் சந்தோஷமாயிருப்பீர்

150 மங்கிலியம் வாழ்த்தி மறையோர்கள் தான்கொடுத்தாள்
பட்டெடுத்து ஓதிக்கொடுத்தாளே பாவையர்க்கு

151 குலநாயகிக்குக் கொசவாமுந் தாழவைத்து
வலமாய் இடைநெருங்க வைத்து மடிசாரிசைத்தாள்

152 மங்கைநல்லாள் சாவித்திரி மடிதனிலே வீற்றிருக்க
விரைக்கோட்டைமேலே வீற்றிருந்தார் அச்வபதி

153 மறையோர்கள் வாழ்த்த மங்கள வாத்தியம்முழங்க
மங்கிலிய தாரணமுஞ் செய்தார் மனோகரமாய்

154 சாவித்திரி தேவியுடன் சத்தியவான் வீற்றிருந்து
காராவின் நெய் சொரிந்து காக்ஷி ஓமங்கள் பண்ணி

155 அம்மி மிதித்து வந்தாள் அருந்ததியைப் பார்த்து வந்தாள்
ஆசிர்வாதங்கள் பண்ணி அனுக்கிரகித்தார்மாமுனிகள்

156 கடல்போல் முழங்கு மந்தக் கலியாணப் பந்தலினில்
எடுத்துமொரு ஜாடிபணம் ஏற்றமுடனே வழங்கி

157 அன்னமுடன் பாயஸமும் அபூர்வபணியாரங்களும்
திருப்தியுடன் பூஜித்தாள் தேவர்முதல் யாவர்களும்

158 புசித்து எழுந்துமவாள் பொடிதேய்த்துக் கையலம்பி
போஜன தாம்பூலம் புண்ணியருந்தான் கொடுத்தார்

159 நாலுநாள் ஹோமமுடன் கலியாணங்கள் ஆனபின்பு
அச்வபதி ராஜாவும் அவருடைய தேவியரும்

160 புத்திரியைத் தானணைந்து புத்தி சொல்லி முத்தமிட்டு
மத்திர தேசம்போனார் மஹாராஜர் தேவியுடன்.

சாவித்திரியம்மன் கௌரி நோன்பு செய்தல்.

161 சாவித்திரியம்மன் சலியா மனதுடையாள்
காயித்திரியம்மன் கடுந்தபஸு செயலுற்றாள்

162 நாரதர் சொன்னதொரு நாளைக்குறித்து வைத்து
அவர் சொன்னகால அளவை மனதில் வைத்து

163 ஆபரணம் பூணும் அபேட்சைகளு மில்லாமல்
மரவுரி கிருஷ்ணஜசனமும் மங்கையருந்தான் தரித்து

164 மாமிமாமன் சிச்ருஷை மகிமையுடன் செய்து வந்தாள்
பர்த்தாவின் சிச்ருஷை பக்தியுடன் பண்ணி வந்தாள்

165 கௌரியைப் பூஜித்துக் கிளிமொழியாள் நோன்பிருந்தாள்
உபவாஸ மகாவிரதம் உத்தமியுந் தானிருந்தாள்

166 அமாவாசை பௌர்ணமியும் அஷ்டமி சதுர்த்தசியும்
மாஸம் முதல் தேதியிலும் மஹாதேவியரைப் பூஜித்தாள்

167 பஞ்சபர்வத்தில் பார்வதியைப் பூஜைசெய்தாள்
பார்வதி தேவியை நோக்கித் தவமிருந்தாள் பாவையரும்

168 மூன்று நாள் மௌனவிரதம் மிருது குழலாள் தானிருந்து
உபவாஸமாகவிருந்தாளே உத்தமியாள்

169 பால்குன மாதம் முதல் நாள் பாவைநல்லாள் சாவித்திரி
நாரதர் வாக்கியத்தை நன்றாகவே உணர்ந்து

170 மஹாரிஷி சொன்னதொரு நாளு மிதுவாகு மென்று
அதிகாலேயில் எழுந்து அம்பிகையைப் பூஜை பண்ணி

171 பக்திபெரிதாலே பரதேவியைச் சிந்தை பண்ணி
பாரணேகள் பண்ணுதே பத்தினியுந் தானிருந்தாள்

172 மாமனார் மாமியார் மங்கைதனே நோக்கி யவாள்
பாரணேகள் பண்ணுமம்மாபைங்கிளியேயென்று சொன்னாள்

173 அம்மா ஆருஞ்சாமத்தில் அஸ்தமித்த பிற்பாடு [ரைத்தாள்
போஜனங்கள் பண்ணுகிறேன் புண்ணியர்காள் என்று

174 தபஸில் திடமுடைய சத்தியவான் அப்பொழுது
காட்டிற்குப்போகவென்றும்காய்கிழங்குவெட்டவென்றும்

175 கோடாலி தானெடுத்துத் தோள் தனிலே வைத்துமவன்
வெறகொடித்து நானும் வரேன் என்று வழிநடந்தான்

176 வேகமுடன் நடக்க மெல்லியருங் கிட்ட வந்து
நானும் வரேன் காட்டினிற்கு நாயகரே என்று சொன்னாள்

177 மாதா பிதாவின் அனுமதியைக்கேட்டு வந்தால்
கூடவா என்னுடனே கொம்பனேயே என்றுசொன்னார்

178 இருமிங்கே என்று சொல்லி ஏந்திழையாள் சாவித்திரி
ஓடி ஒருநொடியில் ஓட்டமுடன் கிட்டவந்து

179 மாதாபிதாவை வணங்கியே மங்கையரும்
காட்டுக்குப் போய் வருவேன் கணவருடனாக

180 அனுப்பிவைக்க வேணுமென்று அன்புடனே கேட்டு நின்றாள்
(அம்மா) நீ இத்தனே நாள்தன்னில் கேட்டதில்லே இந்தவரம்

181 பட்டினியாக இருக்கின்றாய் பைந்தொடியே
போய்வாரும் சடுதியிலே என்றுரைத்தார் புண்ணியர்கள்

சாவித்திரியம்மன் கணவருடன் காட்டுக்கு ஏகுதல்.

182 ஓடிநடந்து வந்து உத்தமியாள் சாவித்திரி
பர்த்தாவின் பாதம் பணிந்து நமஸ்கரித்து

183 பின்னே நடந்தாளே பொற்கொடியாள் சாவித்திரி
சத்தியவான் தன்னுடைய தேவியரின் கைப்பிடித்து

184 இந்தக் காடு தன்னைப்பாராய் கமலப் பூநாயகியே
விருக்ஷஞ் செடி கொடிகள் பாராய் நீ மெல்லியரே

185 புஷ்பங்கள் பூத்துச் சொரிவதைப்பார் பொற்கொடியே
மானுங் கலையும் விளையாடுவதை நீ பாராய்

186 தாமரை ஓடைகளைப் பாராய் நீ தார்குழலே
என்று சொல்லி சத்தியவான் இங்கு மங்கும் காட்டிவர

187 (அவள்) அதுவொன்றும் பாராதே அந்தரங்கரணம் நடுங்கி
நாரதர் சொன்னதொரு நாழிகையை எண்ணிவாராள்

188 தவசீலனுகுமந்த சத்தியவானப்பொழுது
காட்டினிலுள்ள கனி கிழங்கு தான் பறித்து

189 பழங்கள் பறித்துமவர் தழையினால் கட்டிவைத்து
கண்டகக் கோடாலியினால் கட்டை பிளக்கலுற்றார்.

எமதர்மராஜன் சத்தியவான் ஜீவனைக் கொண்டுபோகுதல்.

190 கட்டை பிளக்கும்போது கண்கள் கலங்கியவர்
தலையுங் கிறுகிறுக்கத் தன் வசங்களன்றியிலே

191 தலையு மிகவலிக்கத் தன்னுடம்பும் வேர்த்துவிட
நித்திரையுஞ்செய்ய வருகுதிப்போ நேரிழையே

192 (என்று) வந்து விழுந்தான் மலைபோல சத்தியவான்
மடியில் விழுந்தவுடன் மங்கையவள் கலங்கி

193 உள்ளம்பறக்க அம்மன் உடம்பு நடுநடுங்க
ஆம்பல்மலர்க்கண்ணுட்கு அடிவயிறு தானெரிய

195 நெஞ்சம் கலங்கியம்மன் நீலவிழி நீர்சொரிய
மஹாதேவியைத் துதித்து மரத்தடியில் வீற்றிருந்தாள்

195 அங்கோர் மஹாபுருஷன் அதிரூபர் தன்னுடனே
கிரீடமும் குண்டலமும் கேசவனார்போல் நிறமும்

196 கறுத்ததொருமேகம் காளமுகில்போல் வடிவும்
பீதாம்பரமும் பெருத்தமுத்து மாலைகளும்

197 சிவந்தபுஷ்ப மாலைபூண்ட சுந்தரனார் பேரொளியும்
கண்டுமெந்த சாவித்திரி கணவரைக் கீழேவைத்து

198 பிரதக்ஷணமாகவந்து பணிந்து நமஸ்கரித்தாள்
தீர்க்க சுமங்கலியாயிரு வென்றார் அப்பொழுதே

199 இதுவே சகுனமென்று எடுத்து முடிந்தாள் தலைப்பில்
எமராஜரை வணங்கி ஏந்திழையும் கேட்கலுற்றாள்

200 ஆத்மஸ்வரூபமோ அற்புதமாம் விக்கிரகமோ
பிரமஸ்வரூபமோ பேதமற்ற வஸ்துவோ

201 என் ஹிருதயந்தனில் வசிக்கும் எமராஜர் நீர் தாமோ
நீர் யாரென்றெனக்கு அறியவுரையு மென்றாள்

202 சத்துக்கள் கண்ணுக்கு நான் சந்தோஷமாயிருப்பேன்
அசத்துக்கள் கண்ணுக்கு அதிகோரமாயிருப்பேன்

203 பாபிகள் கண்ணுக்கு நான் பயங்கரமாயிருப்பேன்
பாபி இல்லார் கண்ணுக்கு பிரம்மவடிவாயிருப்பேன்

204 எமதர்மராஜ ரென்பாள் என்னுடையநாம தேயம்
சுகிர்தத்தின லுனக்குத்தோன்றினேன் நானுமிப்போ

205 என்று பாசக்கயிறெடுத்து பறபறென்னத்தான் பூட்டி
ஒரு இமைப்பாய்த்தான் இசித்துஉத்தமரைக்கொண்டு சென்றார்

சாவித்திரியம்மன் எமதர்மர்பின்சென்று வரம்பெறுதல்.

206 சாவித்திரியம்மன் சரேலென்று தானெழுந்து
பக்ஷி மிருகந்தீண்டாது பர்த்தாவை ரக்ஷைபண்ணி

207 தழைந்தமரம் வளைத்து தழையொடித்து மேல்மூடி
கிளையின் இலை பறித்துக் கணவரை மூடிவைத்து

208 பின்னே நடந்தாளே பொற்கொடியும் தருமருடன்
பின்னால் நடக்கலுமே பெருமாள் திரும்பி நின்று

209 ஏன் பெண்ணே சாவித்திரி என்னைத் தொடருகிறாய்
அதிதூரம் வழிநடந்தால் அதிக இளைப்பாகும்

210 போவாய் நீ ஊர் நோக்கி பொற்கொடியே என்று சொன்னார்
(ஐயா) பர்த்தாவுடன் நடந்தால் பார இளைப்புமுண்டோ

211 ஒரு இளைப்பு மில்லை ஐயா ஓடிவருவேன் என்றாள்
ஓடிவருவேனென்க உத்தமரும் கேட்டுகந்து

212 (அம்மா) உன்வாக்கு நலமழகும் மங்கள ஸ்தோத்திரமும்
உன் ஸ்தோத்திரங்களாலே செவியுங் குளிர்ந்ததம்மா

213 உனக்கான தொருவரமுங் கேளாய் நீ உத்தமியே
(உன்) பர்த்தா உயிர் தவிரப் பிரியவரங்கேளாய்

214 வரந்தருவ துண்டானல் மஹாராஜா சொல்லுகிறேன்
(எங்கள்) யவசேன ராஜருக்கும் ஏற்றமுள்ள தேவியர்க்கும்

215 இருவருக்கும் இரண்டுகண்ணும் இராஜ்ஜியமும் வேணுமென்
தந்தேன் நான் இந்தவரம் சாவித்திரியம்மா வுனக்கு [றாள்

216 தந்தேன் நான் என்றுசொல்லி தருமர் நடக்கலுற்றார்
தருமர் நடக்கலுமே தார் குழலாள் பின்னடந்தாள்

217 பின்னல் நடந்திடவே பெருமாள் திரும்பி நின்று
ஏன் பெண்ணே சாவித்திரி இன்னம் வருகிறாய்

218 மான்கலைகளுண்டு மத யானையுண்டு வேடருண்டு
பார்க்கப்பயங்கரமாய் புலியுண்டு சிங்கமுண்டு

219 பக்ஷி மிருகமுண்டு இந்தப்பயமான காடுதன்னில்
போவாய் நீ ஊர்தனக்குப்பொற்கொடியேஎன்றுசொன்னார்

220 (ஐயா) சத்துருக்கள் தன்னுடனே சகவாசஞ் செய்திருந்தால்
மஹாபலன்கள் உண்டென்று மஹான்கள் சொல்லிடுவார்

221 உம்முடனே கூட வழிநடந்தால் எந்தனுக்கு
ஒருபய முமில்லை யிப்போ ஓடிவருவே னென்றாள்

222 ஓடிவருவேனென்க உத்தமருங் கேட்டுகந்து
மங்களவார்த்தை தனைக்கேட்டு மனமகிழ்ந்து

223 வாருமம்மா சாவித்திரி (உன்) மணவாளர் தன்னைவிட்டு
வேறொருவரங்கேளாய் மெல்லியரே என்று சொன்னார்

224 (ஐயா) புத்திரனில்லாத புகழுடைய அச்வபதி
அதுவேமனக்குறையாய் என் ஐயருந்தானிருக்கார்

225 நல்லசத்துக்களாயும் சற்குணவரான வருமாய்
சுதருமாராளவர்க்குத் தாருமையா சற்குருவே

226 தந்தேனிந்தவரமும் சாவித்திரியம்மன் வுனக்குத்
தந்தேன் நான் என்று தருமர் நடக்க லுற்றார்

227 தருமர் நடக்கலுமே தார்குழலாள் பின் நடந்தாள்
பின்னால் நடக்கலுமே பெருமாள் திரும்பி நின்று

228 ஏனோ வருகின்றாய் இந்த இருள்சூழ்ந்த காடுதன்னில்
உன் பர்த்தாவின் உத்தரகிரியை நீயுடனிருந்துசெய்வத

229 போவாய்நீ ஊர்தனுக்கு என்று சொன்னார் புண்ணியரும் [ற்கு
தருமருரைக்கலுமே தார்குழலும் ஏது சொல்வள்

230 (ஐயா) புத்திர ரில்லாவிட்டால் புண்ணிய வுலகமில்லை
புற்று நரகமுண்டு பொல்லாத ஜன்மமுண்டு

231 மலடி என்று சொல்லி மானிடர்கள் ஏசிடுவாள்
எந்தனுக்கு நூறுபிள்ளை தாருமென்றாள் ஏந்திழையும்

232 தந்தேன் நானிந்தவரம் சாவித்திரியம்மா உனக்கு
தந்தேனென் என்று சொல்லித் தருமரும் ஓடலுற்றார்

233 குறுக்காய் மறித்துமந்தக் கொம்பனையும் ஏதுசொல்வள்
என்னைத்தொடர்ந்து ஏன்மறித்தாய் என்பீரோ

234 சிருஷ்டிப்பீர் நீரும் ஜகத்திலுள்ள மானிடரை
விச்வபதியாய் நிறைந்து விஷ்ணுவாய் இரக்ஷிப்பீர்

235 சம்ஹார மூர்த்தியுமாய்ச் சகலரையும் சம்ஹரிப்பீர்
தருமந்தவறாத ராஜனென்று தானுரைப்பாள்

236 தீர்க்கமுடன் வாழ்த்தும் உம்முட திருவாக்குப்பொய்யாமோ
பதிவிரதையாவார்கள் பர்த்தாவை யன்றியிலே

237 பதிவிரதா தருமத்தில் பழுதுகள் வாராதே
பதிவிரதைப் பேரொழியப்பட்டப்பெயர் இல்லாதே

238 அருந்தவப் பேரொழிய அவப் பெயர் இல்லாதே [றாள்
புத்திரரைப் பெற்றெடுக்க உபாயமொன்று சொல்லுமென்

239 தெட்டினாய்என்னையிப்போ சிறுபெண்ணே சாவித்திரி
தர்க்கங்கள் சாஸ்திரங்கள் சகலமும் கற்றாலும்

240 உன்னைப்போல் ஸ்தோத்திரங்கள் பண்ணுர் ஒருவருமாய
உன்னுடைய ஸ்தோத்திரத்தால் என் உள்ளங் குளிர்ந்த
241 எப்பொழுதும்போல யவசேனர் தேவியுடன் [தம்மா
இழந்தகண்ணையடைந்து இராஜ்ஜியத்தை யாளவென்றும்
242 சத்தியவான் தன்னுடனே நீ சம்பிரமமாய் வாழவென்றும்
உந்தனுக்கு நூறுபிள்ளை உன் தந்தையர்க்கு நூறுபிள்ளை
243 என்று வரங்கொடுத்து யமராஜர் போனபின்பு
ஐந்துவரங்கொடுத்து அந்தர்த்தான மானபின்பு
244 ஓட்டம் பெருநடையாய் ஓடிவந்தாள் சாவித்திரி
நாயகர் தன்தலையை எடுத்து மடியில் வைத்து
245 சுந்தரனுர் தன்னுடைய திருமுகத்தைப் பார்த்திருந்தாள்
சொர்ப்பனங்கள் கண்டதுபோல் திடுக்கிட்டுக் கண்விழி
246 மஹாபுருஷர் வந்தார் மங்கையரே நீ கண்டாயா [த்து
அறிந்திடுவேன் நாயகரே அனேகம் பொழுதாச்சு
247 அநேகம் பொழுதாச்சு அஸ்தமனமாச்சுதையா
மேகம்வந்து மூடிவெளிச்ச மொன்றுந் தோன்றவில்லை
248 போவோம் நாம் வாருமென்று பொற்கொடியாள் கைப்பிடித்து
பழங்கள் மூட்டைதன்னை பாவையருந்தானெடுத்து
249 கண்டகக்கோடாலி எடுத்து மவள்தோளில்வைத்து
சத்தியவான் கைப்பிடித்து சாவித்திரிதான் நடைந்தாள்.

சாவித்திரியம்மன் கணவர் ஜீவனைமீட்டு மாமன் மாமியிடம் வருதல்.

250 மெள்ள நடந்தாளே மிருது குழலாள் நாதருடன்
காட்டுத்தீயால் வெளிச்சங்கொண்டு வழிநடந்தாள்
251 நக்ஷத்திர வெளிச்சம் நன்ருய் விளங்கிடவே
வழிகண்டுகொண்டு நடந்தாரிருவருமாய்
252 இவர்கள் கதையிங்கே இப்படியுந் தானிருக்க
யவநேசர் தேவியுடன் ஏதுசெய்வாரப்போது
253 காரணங்கள் தோன்றவில்லை கண்கள் தெரிகிறது
மைந்தரும் தேவியரும் வாராதிருப்பானேன்

254 அங்குமிங்கும் ஓடிப்பார்த்தே புலம்பலுற்றார்
; எங்குங்காணாதே ஏங்கிப்புலம்பலுற்றார்

255 அபயமபய மென்று அழுதாரிருவருமாய்
வனத்திலேயுள்ள மஹாரிஷிக ளெல்லாரும்

256 எல்லாரும் வந்திருந்து ராஜனுக்கு ஏது சொல்வாள் [தால்
உம்ம புத்திரற்குத் தீங்கில்லை பொற்கொடியும் போயிருந்

257 (அவள்) மானுடர் என்றும் மனுஷி என்றும் எண்ணாதீர்
பொல்லாத லக்ஷணமும் இல்லையந்தப் பொற்கொடிக்கு

258 இப்போ வரப்போரார்கள் ஏங்காதிருங்களென்று
அந்தணர்கள் தேற்ற அவர்களங்கு வீற்றிருந்தார்

259 சத்தியவானைத் தன் தோளின் மேலேயணைத்து
வந்து பணிந்தார்கள் மாதா பிதாவையப்போ

260 வந்துபணிந்த மகனை வாரி எடுத்தணைத்து
தந்தையரும் மார்புடனே தழுவி எடுத்தணைத்து

261 இத்தனை போதாக வராமலிருப்பானேன் என்மகனே [ன்றார்
காரணங்கள் என்னவென்று காண் முன்னேயே சொல்லு மெ

262 (என்) வசமழிந்து நித்திரையும் பண்ணினேன் மகாத்மாவே
அதுவொழிய நானறியேன் என்றாரே சத்தியவான்

263 அந்தணர்கள் மஹாரிஷிகள் இந்த ஆரணங்கைச் சூழ்ந்து
சாவித்திரி யம்மா நீர் காட்டுக்குப் போனீரே [கொண்டு

264 காரணங்கள் யாதுமுண்டோ உரையீர் கடுக வென்றார்
காரணங்கள் உண்டு அதைச் சொல்வேன் மகாரிஷிகாள்

265 எல்லாருங் கேளுங்கள் என்னுடையவன் குறையை
அசுவபதி ராஜாவின் அருந்தபஸு யாகத்தில்

266 கன்னிகையாய் உதித்துக் கவலைகெடவே யிருந்தேன்
காட்டுக்கு வந்தேன் இந்தக்கணவரை நான் வரித்தேன்

267 நாரதமஹாரிஷியும் என் நாயகரின் தீங்கு சொன்னார் [றேன்
அன்றுமுதல் இன்றளவும் அம்பிகையை வேண்டி நின்

268 இன்றைக்குக் காட்டுக்கு இருவருமாய்ப் போனோமே
எமராஜர் எந்தனுட நாயகரைக் கொண்டு சென்றார்.

269 பின்னே நடந்துசென்று பொருளேவேண்டி நின்றேன்
ஐந்துவரமுங் கொடுத்து அந்தர்த்தான மடைந்தார்

270 ஐந்துவரம் ஏதென்றால் அந்தணர்கள் சொல்லுகிறேன்
எங்கள் யவசேன ராஜருக்கும் ஏற்றமுள்ள தேவியர்க்கும்

271 இருவர்க்கு மிரண்டு கண்ணும் இராஜ்ஜியமும் வாங்கிவந்தேன்
(எங்கள்) அச்வபதி ராஜருக்கு நூறுபிள்ளேவேண்டி வரம்
[வாங்கி வந்தேன்

272 எந்தனுக்கு நூறுபிள்ளே கேட்டுவரம் வாங்கிவந்தேன்
எந்தனுட பர்த்தாவை எழுப்பவரம் வாங்கிவந்தேன்

273 ஆச்சரியம் ஆச்சரியம் என்றே அனைவர்களும்
எமனுடனே தர்க்கித்த ஏத்தமுள்ள தேவியிவள்

274 மறித்த அவள் பர்த்தாவை வரவழைத்துக்கொண்டாளே
(ஐயா) உங்கள் மைந்தனேயும் மீட்டுவந்தாள் மறுபடியும்
[கண் கொடுத்தாள்

275 இவள் ஈச்வரியோ வென்று எல்லவருங் கண்டுகந்தாள்
மாமனும் மாமியரும் மனமகிழ்ந்து கண்களித்து

276 மாமியாரும் மகளே மகிழ்ந்தே எடுத்தணைத்து [மடைந்தோம்
(அம்மா) உன்பதிவிரதா தருமத்தால் பாக்கியமெல்லா

277 என்று உத்தமியைக் கொண்டாடி உகந்தா ரிருவருமாய்
சந்தியவானுந் தர்மபத்தினியைக் கொண்டாடி

சாவித்திரியம்மன் முதலியோர் இராஜ்ஜியமடைந்து சுகித்தல்.

278 ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்தே களிகூர்ந்தார்
(இப்படி சந்தோஷமாயிருக்க சாலுவதேசத்திலிருந்து

279 கடுகியொரு தூதன்வந்து கண்டுமந்த ராஜாவை
(உம்ம) சத்துரு ராஜாவுந்தான் மாண்டுபோனதினல்

280 இராஜ்ஜியமாள்வதற்கு வாருமென்றுகைதொழுதான்
பட்டத்து யானேதன்னில் யவசேனர் ஏறிவர

281 அச்வத்தின்மேலே ஏறிவந்தார் சத்தியவான்
சாவித்திரிதேவியும் தன்மாமியுடன் தண்டிகையில்

282 ஏறிவர எல்லவரும் இன்பமுடன் கண்களிக்க
வாத்தியங்கள் தான்முழங்க வந்தார் தன்தேசமதில்

283 பட்டணத்து வீதிசுற்றி வந்தார் அரண்மனையில்
இஷ்டமுடன் ராஜ்ஜியத்தை யவசேனர் தானடைந்தார்

284 அச்வபதி ராஜருக்கு அப்பொழுது தூதனுப்ப
மாளவி தேவியுடன்வந்தாரே அச்வபதி

285 யவசேனராஜர் எதிர் கொண்டு உபசரித்து
உம்ம மங்கையரால் வந்த வாழ்வு இதுராஜரவே

286 அச்வபதிராஜா அதிக சந்தோஷமுடன்
மங்கையுடதன்மகிமை மனமகிழ்ந்து தான்கேட்டு

287 அன்னையருந் தந்தையரும் அருமை மகளை அணைத்து
கண்களித்து ஆனந்த நீர் சொரிந்தார் கண்மலரால்

288 சாவித்திரி நாயகரும் (ராஜா) தாளடியினிற் பணிய
கண்களித்து ஆனந்தங்கொண்டே மனமகிழ்ந்தார்

289 தபஸாலதிகமுள்ள சாவித்திரி யம்மனவள்
தம்பிமார் நூறுடனும் தன்புதல்வர் நூறுடனும்

290 எமராஜன் தன் கிருபையால் ஏற்றமுள்ள ராஜ்ஜியத்தில்
சங்கரியைப் பூஜைபண்ணி ஸெளபாக்கிய வதியாயிருந்

291 மார்க்கண்டேயர் உரைக்க மனமகிழ்ந்து பாண்டவர்கள் [தாள்
ஆச்சரியமாகுமிந்த அருங்கதையைக்கேட்டுமவாள்

292 அம்மன் மகத்துவத்தைக் கேட்டு மனங்குளிர்ந்து
சாவித்திரி தேவியரைச் சிந்தை பண்ணியே ஸ்துதித்தாள்

293 ஒத்திசைத்த கெம்புடனே ஒளிமுத்துக் கோர்த்தாப்போல்
சித்திரமாம் பாரதத்தின் நடுவிருக்கும் சற்கதையை

294 கற்றவருங் கேட்டவரும் கற்றுக் கொடுத்தவரும்
சாவித்திரியம்மனைப்போற் சந்தோஷமாயிருப்பாள்

295 மங்கிலியம் தான்பெருகும் மைந்தர்களைப் பெற்றிடுவாள் [ளுர்.
மஹாதேவி தன்கிருபையால் வாழ்ந்திடுவார் என்று சொன்

ஓம் சுபம்.

விளம்பரம்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாளால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள்.

		ரூ.	அ.	ப.
1.	வால்மீகி ராமாயணப் பாட்டும் ஞானராமாயணக் கப்பலும் (5-ம் பதிப்பு)	0	5	0
2.	குசலவ வாக்கியம் (6-ம் பதிப்பு)	0	5	0
3.	அநந்தங்காடு (5-ம் பதிப்பு)	0	·2	6
4.	ஸ்ரீபார்வதி அம்மன் சோபனம் (4-ம் பதிப்பு) ...	0	5	0
5.	வேதாந்தப் பாட்டுகளும், தினஸரி ஸ்தோத்திரங்களும் (4-ம் பதிப்பு)	0	3	0
6.	ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும் (3-ம் பதிப்பு) ...	0	4	6
7.	பஞ்சீகரண கட்டம்	0	0	6
8.	சாவித்திரி பாடம் (6-ம் பதிப்பு)	0	2	0
9.	ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவி பாடமும் (5-ம் பதிப்பு)	0	5	0
10.	ஐந்து கும்மிகள் (3-ம் பதிப்பு)	0	3	0
11.	குறவஞ்சி { தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம், அகண்ட வெளிக்குறம் } ...	0	3	0
12.	ஸ்ரீமகாபாரத வாக்கியம் விராட உத்தியோக பர்வங்கள்	0	10	0

மேற்கண்ட புஸ்தகங்களை இந்த விலாசங்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

V. S. வாலாம்பாளம்மாள்,
101, பெரிய தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

or

R. சுப்பிரமணிய வாத்தியார்,
BOOK-SELLER, PALGHAT.